**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், சென்னை விவேகானந்தர் இல்லத்தில் விவேகானந்தர் நவராத்திரி விழா தொடக்க நிகழ்ச்சியில் இன்று (8.2.2018) கலந்துகொண்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் உரையாற்றும்போது, சுவாமி விவேகானந்தர் அவர்கள் சிகாகோவில் 1897 ஆம் ஆண்டில் உரையாற்றி இந்தியாவிற்கு திரும்பிய பிறகு 9 நாட்கள் சென்னை விவேகானந்தர் இல்லத்தில் தங்கியிருந்ததை நினைவுகூரும் விழாவாக விவேகானந்தர் நவராத்திரி விழா கொண்டாடப்படுவதாகவும், சகோதரி நிவேதிதா அவர்கள் ஒரு மாத காலம் இங்கு தங்கியிருந்து பெண் விடுதலைக்காக சுவாமி விவேகானந்தரின் கருத்துகளை விளக்கும் பணியினை மேற்கொண்டார் என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவிலிருந்து ஐஸ் கட்டிகளை கொண்டுவந்து சேமிக்கும் இடமாக இருந்த 'ஐஸ் அவுஸ்' பிற்காலத்தில் விவேகானந்தர் இல்லமாக மாற்றம் பெற்றதாகவும், சுவாமி விவேகானந்தர் அவர்களின் அறிவுரைப்படி இராமகிருஷ்ணா மடம், சுவாமி இராமகிருஷ்ணானந்தாவால் இங்கு 10 ஆண்டுகள் இயக்கப்பட்டதாகவும், தற்போது சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகளை மக்களுக்கு விளக்கம் அளிக்கும் மையமாக விளங்குகிறது என்றும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஆட்சியின்போது மக்கள் அடிமைப்பட்டிருந்த நிலையில் விடுதலைப் போராட்டத்திற்கு தூண்டுகோலாக சுவாமி விவேகானந்தர் அவர்கள் மக்கள் விழிப்புடனும், சுயசார்புடனும், உறுதியுடனும் இருக்கவேண்டுமென்று தெரிவித்ததை எடுத்துக் கூறினார். மேலும், பலமே வாழ்க்கை, பலவீனமே இறப்பு என்று அவர் சொன்னதையும் நினைவுகூர்ந்தார். வாழ்க்கையில் துணிச்சலுடன் செயல்படுபவர்கள் தலைமை பண்பை பெறுவார்கள் என்றும், தோல்வியடைபவர்கள் மற்றவர்களால் வழிநடத்தப்படுவார்கள் என்றும் சுவாமிஜி தெரிவித்த உன்னதமான கருத்தை நினைவுபடுத்தினார். இந்தியர்கள் வெற்றியடையும் வரை எழுச்சியுடனும் விழிப்புடனும் இருக்கவேண்டும் என்று அவர் கேட்டுகொண்டதாகவும் தெரிவித்தார்.

சுவாமிஜி அவர்கள் 125 ஆண்டுகளுக்கு முன்பு சிகாகோவில் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையாற்றும்போது, தான் சகிப்புத்தன்மையையும், சகோதரத்துவத்தையும் போதிக்கும் மதத்தைச் சேர்ந்தவர்

என்றும், பல்வேறு மதங்களிலிருந்து அகதிகளாக வருபவர்களுக்கு புகலிடம் அளிக்கும் நாட்டைச் சேர்ந்தவர் என்றும் அவர் அங்கு குறிப்பிட்டதை நினைவுகூர்ந்தார். இஸ்ரேல் மற்றும் பெர்சியாவில் இருந்து வந்த அகதிகளுக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்துள்ளதாக சுவாமிஜி தெரிவித்ததாகவும் சொன்னார்.

சுவாமி விவேகானந்தர் தமிழ்நாட்டு மக்கள் மீது மிகுந்த அன்பு வைத்திருந்ததாகவும் அவர்களிடையே பல்வேறு தலைப்புகளில் உரையாற்றி இளைஞர்களை ஈர்த்தார் என்றும் தெரிவித்தார்.

சுவாமி விவேகானந்தரும், சகோதரி நிவேதிதா அவர்களும் கல்வியின் மூலமே வறுமையையும், துயரையும் ஒழிக்க முடியும் என்று நம்பினார்கள் என்றும், மகாகவி பாரதியார் சகோதரி நிவேதிதா அவர்களின் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு 'புதுமைப் பெண்' என்ற இலக்கியப் படைப்பை உருவாக்கினார் என்றும் தெரிவித்தார்.

சுவாமி இராமகிருஷ்ணானந்தாவும், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரும் இங்கு சந்தித்ததன் அடிப்படையில் சுதேசிக் கப்பல் கம்பெனி உருவானதென்றும் தெரிவித்தார்.

மக்களுக்கு தேசபக்தி, கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்கள் ஆகியவற்றை நேர்மையான முறையில் அளிக்கவில்லையென்றாலும், ஏழை மற்றும் அடித்தட்டு மக்களிடம் சகோதரத்துவத்துடன் நடந்துகொள்ளவில்லையென்றாலும் ஒரு நாடு பெரிய நாடாக வளர முடியாது என்றும் ஆளுநர் தெரிவித்தார். இன்றைய இளைஞர்களிடம் நேர்மையின் மதிப்பு, வெளிப்படைத் தன்மை, தேசப்பற்று ஆகியவைகளை உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இந்தியா முன்னேற்றம் அடைவதற்கு காரணமாக இருந்து, ஜகத்குரு என்ற உயரிய இடத்தினை பெற்ற சுவாமி விவேகானந்தரின் கருத்துகள் உலகம் முழுவதும் பரவுவதற்கு உரியவற்றை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழிக்கேற்ப இதுபோன்ற நல்ல நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமென்ற தனது விருப்பத்தினையும் தெரிவித்தார். நிகழ்ச்சி ஏற்பாடு செய்த இராமகிருஷ்ணா மடத்து நிர்வாகிகளுக்கும் தமிழக அரசுக்கும் பாராட்டுகளை தெரிவித்தார்.